மாண்புமிகு திரு. பொன். முத்துராமலிங்கம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நடப்பு ஆண்டில் இல்லை என்பதைத் தெளிவுபடுத்தியிருக்கிறேன். வருகிற ஆண்டில் அது கவனிக்கப்படும் என்று தெரிவித்துக்கொள்கிறேன்.

கூட்டுறவு நில அடமான வங்கி.

*4003—திருமதி ஏ. எஸ். பொன்னம்மாள்:
மாண்புமிகு உணவு மற்றும் கூட்டுறவுத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா:

வத்தலகுண்டில் கூட்டுறவு நில அடமான வங்கி ஆரம்பிக்க அரசு உடனடி நடவடிக்கை எடுக்குமா?

மாண்புமிகு திரு. பொன். முத்துராமலிங்கம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இது குறித்து கொடைக்கானல் நிலவள வங்கி மகாசபை என்ன தீர்மானம் எடுக்கிறதோ, அந்தத் தீர்மானத்தின் அடிப்படையில் அரசு தொடர் நடவடிக்கை எடுக்குமென்று தெரிவித்துக்கொள்கிறேன்.

திருமதி ஏ. எஸ். பொன்னம்மாள்: மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, கொடைக்கானல் மலையில் இருக்கிற நிலவள வங்கிக்கு வத்தலக்குண்டில் இருக்கிற மக்கள் போக முடியவில்லை என்ற காரணத்தாலேதான் மாண்புமிகு முதல்வர் அவர்களுக்கும், உங்களுக்கும் மனு எழுதிக் கொடுத்து, வத்தலகுண்டில் நிலவள வங்கி வைக்க வேண்டுமென்று நான் கேட்டிருக்கிறேன். அதற்கு இடமெல்லாம் பார்த்த பிறகு, மீண்டும் இதை கொடைக்கானலில் சேர்க்க வேண்டுமென்றால், இந்தக் காரியம் நடக்குமா, நடக்காதா என்பதை அறிவிக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

மணி 9.45

மாண்புமிகு திரு. பொன். முத்துராமலிங்கம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினரவர்கள் வத்தலகுண்டில் ஒரு நிலவள வங்கி ஏற்படுத்த வேண்டுமென்று கேட்டு இருந்தார்கள். அந்தக் கோரிக்கையை மையமாக வைத்து அரசு பரிசீலனை செய்தது. வத்தலகுண்டில் புதியதொரு நிலவள வங்கி ஏற்படுத்துவதற்கு இயலாத சூழ்நிலை இருக்கின்ற காரணத்தாலே 'நாட் வயபிள்' என்கின்ற நிலை இருக்கின்ற காரணத்தாலே கொடைக்கானலில் உள்ள நிலவள வங்கியை வத்தலகுண்டுக்கு மாற்றலாமா என்று அரசு பரிசீலனை செய்தது. அப்படி பரிசீலனை செய்கின்ற நேரத்தில் சட்டப்படி

1990 மார்ச் 20]

கொடைக்கானலிலுள்ள நிலவள வங்கியின் பொது மகா சபை ஒரு தீர்மானத்தை நிறைவேற்றித் தரவேண்டும். அப்படி நிறைவேற்றித் தந்தால்தான் சட்டப்படி அந்த நிலவள வங்கி வத்தலகுண்டுக்கு மாற்ற முடியும். எனவே அந்த நடவடிக்கை இப்போது மேற்கொள்ளப்பட்டு இருக்கிறது என்ற விவரத்தைத்தான் மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்தேன்.

திருமதி ஏ. எஸ். பொன்னம்மாள்: மாண்புமிகு தலைவர் அவர்களே, கொடைக்கானலில் இருக்கிற மக்கள், அந்த வங்கி அங்கத்தினர்கள் அந்த நிலவள வங்கியைக் கீழ கொண்டுபோக அனுமதிக்க மாட்டோம் என்று கலகம் செய்து கொண்டு இருக்கிறார்கள். இந்தச் சூழ்நிலையில் வத்தலகுண்டில் இருக்கிற மக்கள் ஒரு லோன் போடுவதற்கோ அல்லது ஏதாவது ஒரு காரியத்திற்கோ அவர்கள் கொடைக்கானல் சென்று எங்கே தங்குவது, அங்கு தங்குவதற்கு ஏது இடம், எங்கே தங்க முடியும்? சாப்பாடு எப்படி சாப்பிடமுடியும்? அதனால் அரசு இதை மீண்டும் பரிசீலனை செய்து மாண்புமிகு முதல்வர் அவர்கள் கொடுத்த அஷ்யூரன்ஸை நிறைவேற்றும் அளவில் உடனடியாக வத்தலகுண்டில் ஒரு நிலவள வங்கியை ஆரம்பிப்பதற்கான நடவடிக்கையை மீண்டும் மறுபரிசீலனைக்கு எடுத்துக் கொள்ள முடியுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. பொன். முத்துராமலிங்கம்: மாண்புமிகு தலைவர் அவர்களே, இதிலே பரிசீலனைக்கு எடுத்துக்கொள்வதற்கான அவசியம் இல்லை. ஏற்கெனவே மாண்புமிகு உறுப்பினர்கள் மாண்புமிகு முதல்வர் அவர்களிடம் கொடுத்த மனுவை மையமாக வைத்துத்தான் இந்தக் கோப்பே உருவாகி இருக்கிறது. தொடர் நடவடிக்கையாக கொடைக்கானலிலுள்ள நிலவள வங்கியின் அபிப்பிராயம் கேட்கப்பட்டு இருக்கிறது. அவர்களுடைய அபிப்பிராயம் தெரிவித்த பின்னாலேதான இறுதி முடிவு எடுக்கப்பட்டு மறுபரிசீலனை தேவையா என்பது கூட அப்போதுதான் தீர்மானிக்கப்படும் என்கின்ற விளக்கத்தைத் தெரிவிக்க விரும்புகிறேன்.

திரு. ஐ. பெரியசாமி: மாண்புமிகு தலைவர் அவர்களே, வத்தலகுண்டு ஒன்றியத்தையும், நிலக்கோட்டை ஒன்றியத்தையும் இணைத்து நிலவள வங்கி சோழவந்தானில் ஏற்கெனவே இருந்தது. சொத்துக்களும், பொறுப்புகளும் அதிகமாக உள்ளது வத்தலகுண்டு ஒன்றியம் தான். அதைப் பிரித்து கொடைக்கானல் நிலவள வங்கியில் சேர்த்த காரணத்தால் வத்தலகுண்டு பகுதியில் இருக்கக்கூடிய பெரும்பாலான விவசாயிகள் ஒருவர்கூட கொடைக்கானல் சென்று இதுவரை கடன் பெறுவதற்கு எவ்வித வசதியும் வாய்ப்பும் இல்லை. ஆனால் கொடைக்கானலைப் பொறுத்தவரையில் கொடைக்கானலிலிருந்த நிலவள வங்கி,

அங்கு இருக்கக்கூடிய குமரிக்காடு விவசாயிகளுக்கு பெருமளவு உதவி செய்து வந்தது. தற்போது அங்கு விவசாயம் நடைபெற வில்லை. எனவே கொடைக்கானலிலிருந்து பெரும்பாலும் தினமும் வத்தலகுண்டுக்கு வந்து செல்கின்ற விவசாயிகள்தான் அவர்களுடைய விளைபொருள்களை விற்பதற்கு வத்தலகுண்டுக்குத் தான் வரவேண்டிய சூழ்நிலை இருக்கிறது. எனவே அவர்களுக்கு வசதி வாய்ப்பாக வத்தலகுண்டில் வங்கி அமைத்தால் நிச்சயமாக கொடைக்கானலில் இருப்பவர்களுக்கு வசதியாக இருக்கும். அவர்களுடைய விளைபொருள்களையும், விவசாயப்பொருள் களையும்....

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினாவாகக் கேட்கவேண்டும். உறுப்பினர் அடுத்துப் பேசும்போது அவருடைய நேரத்தைக் குறைக்க வேண்டி இருக்கும்.

திரு. ஐ. பெரியசாமி: எனவே வத்தலகுண்டில் அமைத்தால் பொதுவாக எல்லோருக்கும் வசதியாக இருக்கும் என்பதைக் கருத்தில் கொண்டு அமைச்சர் அவர்கள் வத்தலகுண்டில் வங்கி நிறுவுவதற்கு உதவுவாரா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. பொன். முத்துராமலிங்கம்: மாண்புமிகு தலைவர் அவர்களே, மாவட்டம் இரண்டாகப் பிரிக்கப்பட்ட காரணத்தாலேதான் இந்தச் சங்கடங்கள் உருவாகி இருக்கின்றன. மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் எடுத்துத் தெரிவித்த நியாயங்களை அரசு பரிசீலிக்கும் என்று தெரிவித்துக்கொள் கிறேன்.

திரு. எல். மூக்கையா: மாண்புமிகு தலைவர் அவர்களே, கொடைக்கானலிலிருந்து ஏறத்தாழ 40 அல்லது 50 கிலோ மீட்டருக்கு மேல் மேல்மலையனூரில் இருக்கக்கூடிய மங்களூர், பூண்டி, புகளூர் மக்கள் எல்லாம் கொடைக்கானல் நகருக்கு வந்து, அந்த வங்கியில் தொடர்பு கொள்ள மிகவும் சிரமப்படுகிறார்கள். அந்த நிலையில் கொடைக்கானல் நிலவள வங்கியை வத்தலக்குண்டுக்கு மாற்றி அமைக்க வேண்டும் என்கின்ற எண்ணத்தை அரசு கைவிட வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

மாண்புமிகு திரு. பொன். முத்துராமலிங்கம்: மாண்புமிகு தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் எடுத்துத் தெரிவித்த கருத்துக்கள் விரிவாக விவாதிக்கப்பட வேண்டும் எனபதற்காகத்தான் கொடைக்கானல் நிலவள வங்கி மகாசபைக்கு அந்த வாய்ப்பு ஏற்பட்டு இருக்கிறது.